


ஸ்புல்லாவுக்கு இரண்டு முகங்கள் உண்டு. அவர்கள் அதை இரண்டு பிரிவுகள் என்று சொல்லுவார்கள். ஒன்று, தீவிர அடிதடி முகம். இன்னொன்று ஜனநாயக வாசனையுடன் கூடிய சுத்தமான அரசியல் முகம்.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நிகழ்த்தும் ஹிஸ்புல்லாவின் ஜிஹாத் பிரிவுக்கும், லெபனான் நாடாளுமன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்தி, வெற்றி பெற வைத்து, மக்கள் சேவை செய்யும் அரசியல் பிரிவுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. இவர்கள் வேறு, அவர்கள் வேறு. ஆனால், ஒரே இயக்கம்தான். ஒரே பெயர்தான். ஒரே தலைவர்தான். (அவர்கள் செகரெட்டரி ஜெனரல் என்பார்கள். ஹிஸ்புல்லாவின் தற்போதைய தலைவர் பெயர் ஹஸன் நஸரல்லா.)

ஓர் அவசர ஆத்திரத்துக்கு ஹிஸ்புல்லாவின் அரசியல்வாதிகளுக்கு, ஹிஸ்புல்லா ஆயுதவாதிகளே அடியாட்களாக உதவுவார்களா என்றெல்லாம் அபத்தமாக யோசிக்கவே முடியாது. லெபனானின் பரிபூரண சுதந்திரம், முழுமையான இஸ்லாமிய ஆட்சி என்கிற கனவுதான் அவர்களுக்கு. இதற்கு ஜனநாயக ரீதியிலான அரசியல் பாதை, வன்முறையின் தடத்தில் ஆயுதப் பாதை என்று இரண்டு ரூட்டுகளுமே ஹிஸ்புல்லாவுக்குச் சம்மதம்தான்.

குழப்புகிறதா? என்னடா இது, நம்மூர் தி.மு.க., அ.தி.மு.க.வுக்கெல்லாம் தனியே ஒரு ராணுவப் பிரிவு இருந்தால் பார்க்க நன்றாகவா இருக்கும்? இது எப்படி அந்த ஊரில் சரிப்படுகிறது என்று தோன்றுகிறதா? எப்படி அனுமதிக்கிறார்கள் என்று வியப்பாக இருக்கிறதா?

லெபனானின் அரசியல் சூழல் அப்படிப்பட்டது. ஹிஸ்புல்லா ஆயுதம் தூக்கி, தெற்கு வாசலில் காவலுக்கு நிற்காவிட்டால், இஸ்ரேல் அந்த தேசத்தை எப்போதோ தின்று ஏப்பம் விட்டிருக்கும் என்பது லெபனானியர்களுக்குத் தெரியும். அமெரிக்கா நடுவே வந்து நின்று நிலப்பரப்பைக் கூறு கட்டி ஏலம் போட்டு விற்றிருக்கும் என்பதில், அவர்களுக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது. லெபனானின் இயற்கை வளம் அப்படிப்பட்டது. மத்தியக் கிழக்கின் ஸ்விட்சர்லாந்து என்பார்கள். அப்படியொரு எழில் கொஞ்சும் பிராந்தியம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், லெபனானை ஒரு பெரிய சைஸ் ஹோட்டலாக உருவகப்படுத்திக் கொள்ளுங்கள். என்றால், அங்கே உட்கார்ந்து சாப்பிட்ட அரசுகள் ஏராளம். சிரியா ரொம்பநாள் லெபனானை ஆண்டிருக்கிறது. ரோம சாம்ராஜ்ஜியம் பீமபுஷ்டியுடன் இருந்த காலத்தில், அவர்கள் கொஞ்சம் ஆண்டிருக்கிறார்கள். பைஸாண்டியர்கள், கிறிஸ்துவர்கள், பிரெஞ்சுக்காரர்கள் என்று லெபனானை ஆண்டவர்களின் பட்டியல் மிக நீளமானது. சுமார் நானூறு வருடங்கள் துருக்கிய ஒட்டாமான் பேரரசின் ஆளுகையிலும் லெபனான் இருந்திருக்கிறது. முதல் உலகப்போரின் இறுதியில் சிரியாவின் 'ஒரு பகுதியாக' லெபனானை பிரான்ஸ் அபகரித்திருந்தது. எப்படியும் என்றாவது ஒருநாள் விட்டுவிட்டுத்தான் போகப்போகிறோம், இருக்கிறபோது கொஞ்சம் விளையாடிப் பார்க்கலாமே என்று முடிவு செய்து, சிரியாவை இனக்குழு ரீதியில் பல மாகாணங்களாகப் பிரித்தது பிரான்ஸ்.

இனக்குழுக்களிலேயே கிறிஸ்துவ, இஸ்லாமியப் பிரிவுகள் அங்கே ஏராளம். ஆகவே, அதையும் கவனத்தில் கொண்டு, சிரியாவின் பகுதியாக அப்போதிருந்த லெபனானை ஒரு கிறிஸ்துவக் காலனியாக ஆக்கத் திட்டமிட்டது பிரான்ஸ். சிரியா முழுவதும் சிதறிக்கிடந்த கிறிஸ்துவர்களைத் திரட்டி, லெபனானுக்கு அனுப்பினார்கள். பிரான்ஸிலிருந்தும் பிற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் ஏராளமான கிறிஸ்துவ மிஷனரிகள் அங்கே தருவிக்கப்பட்டனர்.

அப்படியும், லெபனானின் தெற்குப் பகுதியில் ஓரளவு அப்போதும் முஸ்லிம்கள் இருக்கவே செய்தார்கள். பெரும்பாலும் ஷியா முஸ்லிம்கள். கொஞ்சம் சன்னி முஸ்லிம்கள். இந்த முஸ்லிம்கள் அப்போது மைனாரிட்டிகள்தான் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். லெபனான் என்றால் கிறிஸ்துவர்கள் அதிகமுள்ள இடம் என்பதுதான் முதல் உலகப்போர் காலகட்டத்து நிலைமை.

ஆனால், நாற்பதுகளின் தொடக்க ஆண்டுகளில் ஐரோப்பாவைப் பிடித்த அரசியல் சனி, உச்சமடையத் தொடங்கியது. எங்கும் ஹிட்லர் என்பதே பேச்சு. 1943-ம் ஆண்டு ஜெர்மனி, பிரான்ஸை வெற்றிகொண்டது. ஆகவே, பிரெஞ்சுக் காலனிகளில் சிலவற்றுக்கு விடுதலை அடையும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றுள் லெபனானும் ஒன்று.

ஆனால், பிரான்ஸ் தன் முத்திரையைப் பதிக்காமல் போகவில்லை. லெபனான் ஒரு சுதந்திர நாடானாலும், அதன் அதிபர் ஒரு கிறிஸ்துவராகவும், பிரதமர் முஸ்லிமாகவும் இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்துவிட்டுப் போய்விட்டார்கள்.

லெபனானைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் அங்கே மண்ணின் மைந்தர்கள். கிறிஸ்துவர்கள், கொண்டுவந்து குடியமர்த்தப்பட்டவர்கள். என்னதான் கிறிஸ்துவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், இந்த ஏற்பாட்டை முஸ்லிம்களால் முழு மனத்துடன் ஏற்கமுடியவில்லை. உரசல் என்பது அந்தக் கணத்திலேயே ஆரம்பமாகிவிட்டது.

அடிக்கடி அரசுகள் மாறுவது, ஆங்காங்கே கலவரம், அடிதடி, கடையடைப்பு என்பது தினசரி நடவடிக்கைகளுள் ஒன்றாகிப்போனது.

இந்த நிலைமையில், 1947-ம் ஆண்டு நாமெல்லாம் சுதந்திர சந்தோஷத்தில் திளைத்துக்கொண்டிருந்த தருணத்தில், ஒட்டுமொத்த மத்தியக்கிழக்கும் பயத்திலும் பதற்றத்திலும் சிக்கி உழன்றுகொண்டிருந்தது. எப்படியும் மிகக்கொஞ்ச காலத்துக்குள் பாலஸ்தீன் பிளக்கப்பட்டு, இஸ்ரேல் என்கிற தேசம் அங்கே உருவாகிவிடும் என்கிற சூழ்நிலை. பெரும்பாலான மேற்கத்திய நாடுகள், இஸ்ரேலுக்கு ஆதரவாக அணி திரண்டு நிற்க, மத்தியக் கிழக்கு முஸ்லிம் தேசங்களின் கூட்டமைப்பான அரேபிய லீக் (Arab league) ஏதாவது செய்யவேண்டும். ஆனால், என்ன செய்வதென்று புரியாத சூழலில் அடிக்கடி கூடிப்பேசிக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தது.

அப்போது, லெபனானின் பிரதமராக இருந்த ரியாத் சோல் (Riad solh), அத்தனை அரேபிய தேச அரசுகளிடமும் எப்படியாவது பாலஸ்தீன் துண்டாடப்படுவதைத் தடுக்கவேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டிருந்தார். தேச அடையாளங்களைத் தாண்டிய ஒரு பொதுவான அரேபிய அடையாளத்துடன், இஸ்ரேலுக்கு எதிரான ஒரு பெரும்படையைத் திரட்டவேண்டும் என்பது அவரது கனவு. அரேபிய விடுதலைப் படை (Arab Liberation Army) மே 15, 1948 அன்று உருவானபோது, அதற்குத் தம் முழு ஆதரவையும் அவர் தெரிவித்தார்.

ரோஷ் ஹனிக்ரா (Rosh Hanikra) என்கிற இஸ்ரேல், சிரியா எல்லைப்பகுதி கிராமம் வழியாக முதல் முதலில் இந்த அரேபிய விடுதலைப் படை இஸ்ரேலுக்குள் ஊடுருவியது. மாபெரும் யுத்தம்; இறுதியில் வெற்றி என்று கனவு கண்டுகொண்டிருந்த லெபனான் பிரதமருக்கு, ஊடுருவல் நடந்த மிகச் சில தினங்களிலேயே நிலவரம் புரிந்துவிட்டது. தமது படை பெரிய அளவில் அல்ல;

மிகச்சிறிய அளவில் கூட இஸ்ரேலைச் சலனப்படுத்தாது என்கிற உண்மையை, அவரும் பிற அரேபியத் தலைவர்களும் உணர்ந்த நேரத்தில், இஸ்ரேல் மிக உக்கிரமாக லெபனான், சிரியா, ஜோர்டன், எகிப்து என்று தாக்க வந்த அத்தனை பேரையும் பின்னி, பெடலெடுத்துக் கொண்டிருந்தது.

31 அக்டோபர் 1948 அன்று அரேபிய விடுதலைப்படை மிக மோசமான தோல்வியைச் சந்தித்தது. இதற்குமேல் ஒன்றும் செய்யமுடியாது என்கிற நிலைமை. எஞ்சியிருந்தவர்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள லெபனானுக்குள் ஓடிவந்துவிட்டார்கள். தொடர்ந்து அமைதிப் பேச்சுகள், ஒப்பந்தம் இத்தியாதி.

லெபனானிலிருந்து இஸ்ரேல் தன் படைகளை வாபஸ் பெற்றுக்கொண்டது. 1967 வரை பெரிதாக எந்தப் பிரச்னையும் இல்லாமல், உள்ளுக்குள் மட்டும் பகைக் கனல் வளர்த்துக்கொண்டிருந்தார்கள்.

மறுபடியும் ஆறுநாள் யுத்தம், அடிதடி, அமைதி. எப்போது இஸ்ரேல் என்கிற தேசம் உருவானதோ, அன்றிலிருந்து இன்றுவரை அந்தப் பிராந்தியத்தில் இதுதான் தொடர்ந்துகொண்டிருக்கிறது. சக்தி மிகும்போது யுத்தம். வலி மிகும் நேரத்தில் அமைதி. நிரந்தர அமைதி என்பது மட்டும் கண்டிப்பாகக் கிடையாது.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது, ஹிஸ்புல்லாவின் தோற்றமும் இருப்பும் லெபனானின் அரசியல் சூழலில் தவிர்க்கமுடியாத ஓர் அம்சமாகத்தான் தெரியும்.

அரசியல்ரீதியில் அவர்கள் எவ்வாறு இயங்குகிறார்கள் என்பதைப் பிறகு பார்க்கலாம். இப்போது ஹிஸ்புல்லாவின் ஜிஹாத் பிரிவைக் கவனிப்போம். ஆயுதப் பிரிவு. அதாவது, அடிதடிப் பிரிவு.

இந்தத் தொடரின் தொடக்க அத்தியாயங்கள் சிலவற்றுக்குள்ளாகவே இதன் தலைவரான இமத் ஃபயாஸ் மக்னியாவை நாம் அறிமுகம் செய்துகொண்டிருக்கிறோம். ஒசாமா பின்லேடனைக் காட்டிலும், இவரது தலைக்குத்தான் அமெரிக்கா அதிக விலை வைத்திருக்கிறது. டிசம்பர் 7, 1962-ல் பிறந்த மக்னியா, அத்தனை சுலபத்தில் வெளியே வராதவர். ஒரே ஒரு புகைப்படம்தான் வெளியாகியிருக்கிறது இதுவரை. அதுவும் எந்தக் காலத்தில் எடுத்ததோ!

ஹிஸ்புல்லா தோன்றிய தினத்திலிருந்து அந்த இயக்கத்தில் இருப்பவர். தெற்கு லெபனானில் டாய்ர் டிப்பா (Tayr Dibba) என்கிற குக்கிராமத்தில் பிறந்த ஃபயாஸ், மிக இளம் வயதிலேயே பாலஸ்தீன் போராளி இயக்கங்களால் ஈர்க்கப்பட்டவர். 1976-78 ஆண்டு கால கட்டத்தில் யாசிர் அராபத்தின் Force 17 என்கிற பிரத்தியேகப் பாதுகாப்புப் படைப்பிரிவில் பணியாற்றியிருக்கிறார். Sniper என்று சொல்வார்கள். எதிரிகளை நிலைகுலைய வைத்து, அவர்களது தன்னம்பிக்கையைக் குலைக்கும் பணியைச் செய்யும் சீனியர் வீரர் என்று அர்த்தம். இத்தகைய ஸ்னிப்பர்கள், கண்ணுக்குத் தென்படும் எதிரிகள் எல்லாரையும் சுட்டுக்கொண்டிருக்கமாட்டார்கள். யார் கமாண்டர், யார் யார் முக்கியஸ்தர்கள் என்று பார்த்துப் பார்த்துப் போட்டுத்தள்ளுவதுதான் இவர்களது உத்தியோகம்.

மக்னியா ஹிஸ்புல்லாவில் இணைந்ததும் செய்த முதல் காரியம், அடிப்படைப் போர்ப்பயிற்சி பெற்ற போராளிகளுக்கு அட்வான்ஸ்டு லெவல் வகுப்புகள் எடுத்ததுதான். ஆள் கடத்தல் எக்ஸ்பர்ட்டுகளான ஹிஸ்புல்லாவினருக்கு, நெருங்கவே முடியாத பாதுகாப்பு வளையங்களை நொறுக்கித் தள்ளிவிட்டு, உள்ளே நுழைந்து கோழி அமுக்குவது எப்படி என்பதைச் சொல்லிக்கொடுத்த ஆதிகுரு இவரே. வி.ஐ.பி.க்களைக் கடத்துவதுடன், கூட அமெரிக்கச் சுற்றுலாப் பயணிகளை அவ்வப்போது கடத்திவைத்து கதிகலங்க விடுவது என்கிற வழக்கத்தை ஹிஸ்புல்லா போராளிகளின் 'பயிற்சி'க்குப் பயன்படுத்தியவர் ஃபயாஸ். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் விஷயத்தில் கருணை என்கிற சொல்லுக்கோ, இரக்கம் என்கிற உணர்வுக்கோ சற்றும் இடமில்லை

என்பதுதான் ஃபயாஸின் சித்தாந்தம்.

1983-ம் ஆண்டு ஏப்ரலில், லெபனானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் குண்டு வைத்தது, அதே ஆண்டு மீண்டும் அக்டோபரில் லெபனானுக்கு வந்த அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்றைத் தகர்த்துவிட்டு, ஃப்ரெஞ்சு பாராட்ரூப்பர் (விமானத்திலிருந்து பாராச்சூட் மூலம் நேரடியாகப் போர்க்களத்தில் குதிக்கவல்ல வீரர் என்று பொருள்) ஒருத்தரையும் சுட்டுக் கொன்றது, 1984-ம் ஆண்டு மீண்டும் பெய்ரூத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் வேறொரு கட்டடத்தில் குண்டு வைத்தது, 1994-ல் ப்யூனர்ஸ் அயர்ஸில் உள்ள இஸ்ரேலியத் தூதரகத்தையும் ஒரு யூத கலாசார மையக் கட்டடத்தையும் தகர்த்தது, எண்பதுகள் முழுவதிலும் ஏராளமான ஆள் கடத்தல் என்று ஃபயாஸின் வாழ்க்கை வரலாற்றுப் பக்கங்கள் அனைத்தும் ரத்தத்தால் எழுதப்பட்டவை.

ஹிஸ்புல்லாவின் தீவிரம் எப்படிப்பட்டது என்பதைப் புரிந்துகொள்வதற்கு, மக்னியா வடிவமைத்த சில தாக்குதல்களைக் கவனமாகப் பார்ப்பது உதவும்.

ஜூலை 19, 1982 அன்று ஹிஸ்புல்லா முதல் முதலில் தன் கணக்கைத் தொடங்கியது. பெய்ரூத்தில் உள்ள அமெரிக்கன் பல்கலைக்கழகத்தின் தலைவர் டேவிஸ் எஸ். டாட்ஜ் என்பவரை ஹிஸ்புல்லா போராளிகள் கடத்தினார்கள். டாக்டர் டாட்ஜ், ப்ரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் ராணுவத்துறையில் பட்டம் பெற்றவர். இரண்டாம் உலகப்போர் சமயத்தில், ராணுவ உளவுப்பிரிவில் பணியாற்றியவர். மிகத் தீவிர அமெரிக்க விசுவாசி. இஸ்ரேலின் இருப்பை நியாயப்படுத்தி இவர் எழுதிய சில கட்டுரைகள்தான் ஹிஸ்புல்லாவுக்குக் கோபம் வரவழைத்தன.

டாக்டர் டாட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பும் வழியில், சில ஹிஸ்புல்லா போராளிகள் அவரது காரை மடக்கி, கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். அந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை டாட்ஜ் எங்கே, எங்கே என்று கேட்காத அமெரிக்கர்களே இல்லை. கமுக்கமாகக் கடத்திக் கொண்டுபோய் ஒரு ரகசிய இடத்தில் வைத்து, வேளைக்குச் சாப்பாடு போட்டு, உடுத்திக்கொள்ளத் துணிமணியெல்லாம் வாங்கிக் கொடுத்து, பத்திரமாகப் பார்த்துக்கொண்டது ஹிஸ்புல்லா. ஒரு நாலு மாதகாலம் தண்ணி காட்டிவிட்டு, அப்புறம் விடுதலை செய்துவிட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை அந்தக் கடத்தல் ஒரு நெட் ப்ராக்டிஸ்.

விடுதலை செய்தபோதுதான் முதல்முதலாக ஹிஸ்புல்லா தனது பிறப்பையும், நோக்கத்தையும் வெளிப் படையாக, பகிரங்கமாக அறிவித்தது. முதலில் இஸ்ரேலோ, அமெரிக்காவோ ஹிஸ்புல்லாவை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. ஏதோ லோக்கல் அரை பிளேடுகள் என்றுதான் நினைத்தார்கள். ஆனால், ஹிஸ்புல்லா தன் அடுத்த திருப்பணியை அரங்கேற்றிய போது வெலவெலத்துப் போய்விட்டார்கள்.